சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.84/2018

21.07.2025

வா.சா.1 திரு. சரவணன், த/பெ. திருமலை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன என்ன பொருட்களுக்கு திருவாரூர் மாவட்டத்திற்கு மொத்த விற்பனையாளராக உள்ளேன் என்றால் ஹார்லிக்ஸ், கேட்பரி சாக்லெட், ஜான்சன் அன்டு ஜான்சன் ஆகியவற்றிற்கு மொத்த விற்பனையாளராவேன். நான் மொத்தமாக நிறுவனத்திடமிருந்து பொருட்களை வாங்கி திருவாரூர் மாவட்டத்தில் ஏஜென்ட்டுகளுக்கு கடனாக பொருட்களை வழங்கி தவணை முறையில் வசூல் செய்துக்கொள்வேன் என்றால் சரிதான். அதே போல் நான் கொடுத்த பொருட்கள் விற்பனையாகாத நிலையில் பொருட்களை திரும்ப வாங்கி கொண்டு பணம் கொடுப்பேன் என்றால் ஏஜென்ட் முறையாக பொருள் விற்பனையாகவில்லை என்று முறையாக போடடுக்கொடுத்தால் பணம் கொடுப்பேன். பொருட்களை நான் ஏஜென்டிடம் கொடுக்கும் போது முதலில் ரசீதில் அசலில் கையொப்பம் வாங்கிகொள்வேன் என்றால் சரதான். வழக்கு தாக்கல் செய்த காலமாகன 19.12.2017 ல் பிரதிவாதிக்கு பொருட்களை கொடுத்துவிட்டு அவரிடமிருந்து ரசீதில் கையொப்பம் வாங்கி கொண்டேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பொருட்கள் கொடுத்தது சம்பந்தமாக என்னிடம் கணிணியில் விவரம் உள்ளது என்றால் சரிதான் அதே போல் ஏஜென்ட்டிடமிருந்து உரிய ரசீதுடன் பொருட்கள் திரும்பி கொடுக்கும் பட்சத்தில் கணிணியில் வரவு வைக்கப்படும் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கொடுத்த பொருட்களுக்கும் அவரிடமிருந்து திரும்ப வரப்பெற்ற பொருட்களுக்கும் உண்டான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளவாறு 12.08.2017 ல் ரூ.1316, 02.12.2017 ல் ரூ.17,146/-ம் அதற்கு பின் ரூ.44,841/-ம் மதிப்புள்ள பொருட்களை பிரதிவாதி திரும்ப செலுத்திவிட்ட நிலையில் கணிணியில் நான் வரவு வைக்கவில்லை என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு பிரதிவாதியை ஏஜென்சியிலிருந்து மாற்றிவிட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பணம் கொடுக்காததால் ஏஜென்சியை கம்பெனி மாற்றியது. பிரதிவாதிக்கு கொடுத்த ஏஜென்சியை மாற்றிவிட்டதால் நான் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய கொடுத்த பொருட்கள் விற்பனை செய்யாமல் தேங்கிவிட்டது என்றால் சரியல்ல. 19.12.2017 வரை என்னிடமிருந்து பிரதிவாதிக்கு தொகை வரவேண்டியதிருந்தது என்றால் சரியல்ல. 27.01.2018 ல் பிரதிவாதி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நாங்கள் பணம்

கேட்டதால் அறிவிப்பு அனுப்பினார். பிரதிவாதிக்கு நான் கொடுத்த பொருட்களின் காலாவதி முடிந்துவிட்டதால் பொருட்களை திரும்ப பெற்றுக்கொள்ளுமாறு 27.01.2018 அறிவிப்பிலேயே சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு காலாவதியான பொருட்களின் மதிப்பு ரூ.1,82,401/- என்றாலும் அதனை நான் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. காலாவதியான பொருட்களை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி காலாவதியான பொருட்களை ஒரு அறையில் வைக்க மாதம் ரூ.1000/- செலவு செய்துவருகிறார் என்றாலும் அந்த தொகையை கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு எவ்வித அறிவிப்பும் இல்லாமல் கொடுத்த ஏஜென்டை ரத்து செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். எதிர்வழக்குரையில் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே இருந்த வரவு செலவு படி நான் தான் பிரதிவாதிக்கு ரூ.70,406/- கொடுக்க வேண்டும் என சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான்கொடுக்கவேண்டியதில்லை. மேற்சொன்ன தொகைக்கு பிரதிவாதி முத்திரை தொகையை கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு எனது தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. காலாவதியான பொருட்களை முறையாக நான் திரும்ப பெறாததால் எதிர்பாத்திய வழக்குரையில் சொல்லியுள்ளவாறு பிரதிவாதிக்கு நான் தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. காலாவதியான பொருட்களை திரும்ப எடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் எனக்கு தாவாபடி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.